செ.வெ.எண்:16 நாள்:07.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.20.67லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாற்றங்கால் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நாற்றங்கால் பணியினை பார்வையிட்டு கூறியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு பொது மக்கள் பயன்பெறும் வகையில் ஊராட்சிகளில் காடுகளின் பரப்பளவை அதிகரித்து ஊராட்சிகளுக்கு அதிக வருமானத்தை பெருக்கும் வகையில் அதிகஅளவு மரக்கன்றுகள் நட்டு வளர்க்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், வத்தனாக்கோட்டை ஊராட்சி வத்தனாக்கோட்டை நால்ரோட்டில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.20.67 லட்சம் மதிப்பீட்டில் நடவு செய்யப்பட்டுள்ள (1லட்சம் மரக்கன்றுகள்) நாற்றங்கால் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம் வத்தனாக்கோட்டை ஊராட்சி வத்தனாக்கோட்டை நால்ரோட்டில் நடவு செய்யப்பட்டுள்ள நாற்றங்கால் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நாற்றங்காலில் இமாஞ்சி, வேம்பு, தாணி, புங்கன், வேம்பை, கருங்காழி, கருவேல், பலா, புளி, புங்கன், நாவல், மலைவேம்பு, பூவரசம், தேக்கு,இலுப்பை போன்ற பல்வேறு மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளை தினமும் உரிய முறையில் நீர் ஊற்றி பராமரிக்க வேண்டும். மேலும் இம்மரக்கன்றுகளை ஊராட்சிகளில் உள்ள சாலையோரங்கள், கண்மாய்கள், குளங்கள் போன்ற பல்வேறு இடங்களில் நட்டு வளர்ப்பதுடன் கூடுதல் மரக்கன்றுகளை ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ். இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள உள்ளாட்சித் தேர்தல் -2016 வாக்கு பதிவு மையத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.ஜா.ஜெயந்திதேவி, உதவிப்பொறியாளர்கள் திரு.கே.சபாபதி, திருமதி.கண்ணகி, இளநிலைப் பொறியாளர் திரு.சந்திரசேகர், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**